## ஆலோசனைகளும் உரிய சிகிச்சைகளும் வழங்கப்படுவது வெகு சிறப்பாகும்!

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம் மருத்துவத் துறையில் மாபெரும் புரட்சி!

### ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக.5-

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம் மருத்துவத்துறை யில் மாபெரும் புரட்சி யாகக் கருதப்படுகிறது. உரிய ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படுவது வெகு சிறப்பாகும் என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழக அரசு கல்வியையும், மருத்துவத்தையும் தன் இரு கண்களாக பாவித்து அதற்கேற்ற வகையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மருத்துவத்துறையில், “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டம் மூலம் விடுகளுக்கே சென்று மருந்து, மாத்திரைகளை வழங்கும் திட்டம் மக்களுக்கு பெரும் பயன் அளித்து வருகிறது. இப்போது அரசு மருத்துவமனைகளில் நாள்தோறும் 7 லட்சம் உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.




இதுதவிர 7 லட்சத்துக்கும் மேற்பட்ட புறநோயாளிகளும் சிகிச்சைக்காக வருகிறார்கள். இதெல்லாம் உடல் நலக்குறைவு ஏற்பட்டவுடன் அளிக்கப்படும் சிகிச்சைகளாகும். என்றாலும் மக்கள் முன்கூட்டியே தங்கள் உடல் நிலையை பரிசோதிப்பது இல்லை. அதன் காரணமாகத் தான் பல உடல் நலக்குறைவுகள் ஏற்படுகின்றன.

இதற்காக கடந்த ஏப்ரல் மாதம் 21ந்தேதியன்று தமிழக சட்டசபையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்தார். இதை செயல்படுத்தும் விதமாக, “நலம் காக்கும் ஸ்டாலின்” என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 3 முகாம்கள் விதம் 388 பஞ்சாயத்து யூனியன்களில் 1,161 முகாம்களும், சென்னை மாநகராட்சியில் ஒரு மண்டலத்துக்கு ஒரு முகாம் வீதம் 15 முகாம்களும், 10 லட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 முகாம்களும், 10 லட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் தலா 3 முகாம்கள் என்றும் ஆக மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்பட இருக்கிறது.

முதல்கட்டமாக 38 மாவட்ட தலைநகரங்களிலும், இந்த முகாம் கடந்த வாரம் சனிக்கிழமை நடந்தது. சென்னையில் இந்த முகாமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இதய மருத்துவம், நரம்பியல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மனநல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு நோய் மருத்துவம் போன்றவற்றில் மருத்துவ நிபுணர்கள் மூலம் பரிசோதனைகளை செய்து சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. அதோடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் இந்த முகாமில் வழங்கப்படுகிறது.

இப்போது நடந்த முகாம்களில் 10 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அனைத்து சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் முடிவுகள் மக்களின் செல்போன்களுக்கு குறுஞ்செய்திகளாக அனுப்பப்பட்டன. தனியார் மருத்துவமனைகளில் பெரும் பொருட்செலவில் செய்யும் பரிசோதனைகள் அனைத்தும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் இலவசமாக நடப்பது நிச்சயமாக மக்களுக்கு நலம் பயக்கும்.

எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன், எக்கோ, கார்டியோகிராம், ரத்த பரிசோதனை என்று அனைத்து பரிசோதனைகளும் ஒரே இடத்தில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டு 6 மாதங்களில் 1,2566 முகாம்களும் நடத்தி முடிக்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்து இருக்கிறார். இது மருத்துவத்துறையில் ஒரு பெரிய புரட்சி என்றால் அது மிகையாகாது. நோய் நொடிகள் வராமல் இருக்க உப்பு, எண்ணெய், சர்க்கரையை சற்று குறை என்பது போன்ற ஆலோசனைகளும் விழிப்புணர்வாக வழங்கப்படுவது வெகு சிறப்பாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேற்று (04.08.2025) சென்னை, அடையாறு, முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருக்குறள் முற்றோதிய 122 மாணாக்கர்களுக்கு பரிசுத் தொகைக்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய் வேண்டுகோள்!

சென்னை,ஆக.5

சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கூட்டம் நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (05.08.2025) செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார். மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பி.ஜே.ஓம்குமார், முனைவர் கெ.ஜெகதீசன், அ.கார்த்திக், ஞா.பிரசன்ன ராஜகுமாரி, கு.ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் நான் (துபாய் வி.ஆர்.விஜய்) அனைவரையும் வரவேற்று பேசுகிறேன்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்க் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் 7-ம் ஆண்டு நினைவுநாள் குறித்து

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி. சுவரைப்பேட்டை கீழ்முதலம்பேடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் காலை உணவு திட்டத்தின் கீழ் பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு அளித்து இப்பள்ளியில் பாதுகாப்பு, குடிநீர் மற்றும் உள்கட்டமைப்பை முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் ஆய்வு மேற்கொண்டார். உடன் கே.ஜி.நமச்சிவாயம் டிலட்சுமிநாரயணன் கே.என்.பழனி, பார்த்தசாரதி. ரவிந்திரன், ரவி ஜெ.என்.எஸ்.பாண்டியன், லால், ராஜா, பாலாஜி, சங்கர். ரஞ்சித், சிவா, திருப்பதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் சிலைக்கு மரியாதை - நலஉதவிகள் வழங்கல்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

கடலூர், ஆக.5-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 07.08.2025 அன்று புதன்கிழமை காலை கடலூர் மேற்கு மாவட்டத்திலுள்ள ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும். இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்டக் கழக நிர்வாகிகள். முன்னாள், இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். என மாவட்ட செயலாளர்

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

# மயிலை கிழக்கு பகுதி பி.எல்.ஏ. 2 - பி.டி.ஓ - வட்டக் கழக ஆலோசனை கூட்டம்!

### கோ.வி.லெனின் பங்கேற்பு! எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, ஆக 5-

மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மயிலை கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் கவனத்திற்கு மயிலை கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து பாக முகவர்கள் BLA2 மற்றும் BDO. ஆலோசனை கூட்டம்

மயிலை கிழக்கு பகுதி எஸ் முரளி தலைமையில் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கோ.வி.லெனின் பங்கேற்பில் இன்று (05.08.2025 - செவ்வாய்கிழமை) மாலை 6 மணி அளவில், மகிழ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது

மற்றும் மயிலை கிழக்கு பகுதி ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் எஸ். முனுசாமி தலைமையில் இன்று (05.08.2025 - செவ்வாய்கிழமை)மாலை 7 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்.

இதில் சீமன் சேகர், பி.எல். தாஸ் எ குமாரி எல்.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டக் கழக செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா .அன்பு, அ . த வ னே ச ன் , வெ.வெற்றிவேல்

கோ கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி மற்றும் மாவட்ட பிரதிநிதிகள். பகுதி அணிகளின் அனைத்து அமைப்பாளர்கள் மயிலை கிழக்குப் பகுதியில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள், வட்டத்தில் உள்ள BLA2 மற்றும் BDO பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி குறித்து சென்னை தென்மேற்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச்செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7வது நினைவு நாள்! கழக தலைவர் –

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆக.7 அமைதிப் பேரணி!

### மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஆக.5

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7-வது நினைவு நாள் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆகஸ்ட் 7 அன்று அமைதி பேரணி நடைபெறுகிறது.

இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவுறுத்தலின்படி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7-வது நினைவு நாளில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக இளைஞர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன் குமார் தெரிவித்துள்ளார்.

# மயிலை மேற்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் மதி அறிக்கை!

சென்னை,ஆக.5-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு முன்னிலையில் பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில் இன்று (05.08.2025 - செவ்வாய்கிழமை) மாலை 7:00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள மயிலாப்பூர் சட்டமன்ற வளாகத்தில் நடைபெறுகிறது.

இதில் வட்ட கழக செயலாளர்கள்,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள்,பாக முகவர்கள் (BLA2) மற்றும் வலைதள பாக உறுப்பினர்(BDA) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு நந்தனம் கி.மதி அறிக்கை விடுத்துள்ளார்.

## எஸ்.மதன்மோகன் முன்னிலை

# சேப்பாக்கம் 114(அ) வட்டக் கழகக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் ஏ.தமீம் அன்சாரி அறிக்கை!

சென்னை, ஆக.5-

சேப்பாக்கம் பகுதி 114(அ) வட்டச் செயலாளர் ஏ.தமீம் அன்சாரி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-


சேப்பாக்கம் பகுதி 114(அ) வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் என் (தமீம் அன்சாரி) தலைமையில் பகுதி செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான எஸ். மதன்மோகன் எம்.சி. முன்னிலையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆகஸ்ட் 7 நினைவு நாள் அமைதிப் பேரணி குறித்து ஆலோசனைக் கூட்டம் சேப்பாக்கம் அருணாச்சலத் தெருவில் இன்று (5.8.2025, செவ்வாய்க் கிழமை) காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்டத்திற்கு உட்பட்ட அணிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ஏ.தமீம் அன்சாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.த.தங்கமுத்து
### ஆகஸ்ட் 5 (1998)



தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்து ஒன்றியத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்திமொழி எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடி நிலையின் போது, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கோவிந்தராஜன்
### ஆகஸ்ட் 5 (2020)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நீடாமங்கலம் பேரூர்ச் செயலாளர், ஒன்றிய அவைத்தலைவர் என பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர பாடுபட்டவர்.

நீடாமங்கலம் பேரூராட்சித் தலைவர், நீடாமங்கலம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.